**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No.94/2017**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 02.09.2025 in accordance with the provision of Act 1 of 1873.

Name : லட்சுமி Husband Name : ஆறுமுகம்

துவக்க நேரம்: 03.03 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

1. தாவா சொத்துக்கள் அனைத்தும் முத்து செட்டி என்பவரது பெயரிலும், அனுபவத்திலும்தான் இருந்தது என்றால் சரியல்ல. எனது தந்தை நெய்வேலி NLC-ல் வேலையில் இருந்ததால் எனக்கு திருமணமான பின்னிட்டு எனக்கு வீடு இல்லாத காரணத்தினால் தாவா சொத்தில் வீடு கட்டி கொடுத்தார் என்றால் சரியல்ல, எனது கணவர்தான் வீடு கட்டினார்.

2. எனது தந்தை ஓய்வு பெற்ற பின்பு கிடைத்த பணத்தில் தாவா சொத்தில் மற்றொரு வீடு கட்டி அவர் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல, 2-வதாக கட்டப்பட்ட வீட்டையும் எனது கணவர்தான் கட்டினார். தாவா சொத்தில் உள்ள 2 வீடுகளையும் எனது கணவர்தான் கட்டினார் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, எனது கணவர் வெளிநாட்டிற்கு சென்று சம்பாதித்த பணத்தில்தான் 2

வீடுகளையும் கட்டினோம், எனது கணவர் வெளிநாடு சென்று சம்பாதித்தற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன்.

3. நான் எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.12 முதல் 14 வரையிலான ஆவணங்களுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு திருமணமான பின்னிட்டு எனது தந்தை எனக்கு வீடு இல்லாத காரணத்தினால் எனக்கு வீடு கட்டி என்னையும், எனது கணவரையும் குடியிருக்க செய்து, பின்னிட்டு தாவா சொத்து குறித்து எனது பெயருக்கு உயிலையும் எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. அதன் பின்னிட்டுதான் எனது கணவர் வெளிநாடு சென்றார் என்றால் சரியல்ல.

4. எனக்கு எத்தனை சகோதர, சகோதரிகள் என்றால் 2 தம்பிகள் உள்ளனர். நான் எனது தந்தையையும், சகோதரர்களையும் ஏமாற்ற வேண்டுமென்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், தாவா சொத்திற்கும், எனக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

முடிவு நேரம்: 03.15 P.M.

| |
|---|
| Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct<br><br>sd/-Jansi Rani<br>Additional District Munsif, Attur |

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.94/2017, Dt.02.09.2025